விழுப்புரம் வடக்கு மாவட்டம், மைலம் சட்டமன்றத் தொகுதி வல்லம் மத்திய ஒன்றியம், மைலம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வல்லம் மற்றும் தீவனூர் ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்ற விழாவில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தி, "தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்" என உறுதிமொழி ஏற்று பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, வல்லம் அமுதா ரவிக்குமார், மயிலம் யோகேஸ்வரி மணிமாறன், துரை, மணிமாறன், ஆசிரியர் கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

சிவகங்கை மாவட்டத்தில் 2000 பூத்களில் உறுதிமொழி ஏற்பு!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் – மு.தென்னவன் – தமிழரசி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சிவகங்கை, செப். 22 –

கழகத் தலைவர் – முதல்வர் அவர்கள் ஆணையின்படி சிவகங்கை மாவட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு 'தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்' என்ற உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி மாவட்டம் முழுவதும் உள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளான திருப்பத்தூர், மானாமதுரை, சிவகங்கை, காரைக் குடி ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளில் உள்ள 2000 மேற்பட்ட வாக்குச்சாவடிகள், பள்ளிக் கூடங்கள், கலையரங்கம் ஆகிய இடங்களில் நடைபெற்றது.

இதில் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி சிங்கம்புணரி தெற்கு ஒன்றியத்தின் சார்பில் அரளிக்கோட்டையில் மாவட்டச் செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையில் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் உறுதிமொழி வாசிக்க கூட்டத்தில் கூடியிருந்த அனைவரும் உறுதிமொழி ஏற்றார்கள்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர் கே.பாலசுப்பிரமணியன், துணைச் செயலாளர் எஸ்.முத்துக்குமார், பொதுக்குழு உறுப்பினர் பெருமாள், தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர்கள் காளிமுத்து, நா.சதீஷ் நிர்வாகிகள் பில்லப்பன், உத்தமி, புகழேந்தி, மதியழகன், பெரியசாமி, காளிதாஸ், இளைஞரணி அரவிந்தன், சரவணகுமார், ராஜேஷ், கணேசன், முனியாண்டி, ராஜேந்திரன், பாலா மற்றும் பாகமுகவர்கள் கிராம மக்கள் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பேரறிஞர் அண்ணா திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். திருக்கோட்டியூரில் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ. வல்லபாய் தலைமையில் நடைபெற்ற உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியில் விவசாய அணி அமைப்பாளர் எஸ்.எஸ். அருனாசலம்.கார்த்தி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சிவகங்கை.

சிவகங்கை நகரில் மன்னர் மேல் நிலைப்பள்ளி ஆர்.ஆர்.கே.பள்ளி, ஆர்.சி. பள்ளி உள்பட ஏழுக்கும் மேற்பட்ட இடங்களில் சிவகங்கை நகரச் செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த் தலைமையில் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான், நிர்வாகிகள் ஜெயகாந்தன், ராஜா அமுதன், எம். முருகேசன், நாச்சியப்பன், ஜெயக்குமார், மதார் கண்மணி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

காரைக்குடி. காரைக்குடியில் காரைக்குடி மாநகரில் 40க்கும் மேற்பட்ட இடங்களில் மாநகரச் செயலாளர் என்.குணசேகரன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலையில் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் மேயர் செயற்குழு உறுப்பினர் எஸ்.முத்துதுரை, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில், நிர்வாகிகள் சொ.கண்ணன், சன் சுப்பையா, சித்திக், துரை.நாகராஜ், ரமேஸ் உட்பட வட்டக் கழக செயலாளர்கள் பாகமுகவர்கள் கலந்து கொண்டார்கள்.

திருப்புவனத்தில் ஒன்றிய கழக செயலாளர் திருமதி வசந்தி சேங்கைமாறன் தலைமையில் மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் முன்னிலையில் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் நிர்வாகிகள் அண்ணாமலை, ஈஸ்வரன், ஏனாதி ராமலிங்கம் உட்பட ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள்பாகமுகவர்கள் கலந்து கொண்டார்கள். மானாமதுரை நகர்கழகத்தின் சார்பில் அண்ணா சிலை முன்பாக நகரக் கழகச் செயலாளர் க. பொன்னுச்சாமி தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் திருமதி தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.இதில் மானாமதுரை நகர் மன்ற தலைவர் முன்னாள் எம்.எல்.ஏ எஸ். மாரியப்பன் கென்னடி, ஒன்றிய செயலாளர்கள் துரை ராஜாமணி அ.முத்துச்சாமி, மா.அண்ணாதுரை முன்னாள் ஒன்றிய குழுத்தலைவர் திருமதி லதா அண்ணாதுரை, நிர்வாகிகள் ரவிச்சந்திரன், நகர் மன்ற துணைத் தலைவர் பாலா சுந்தர் .கார்த்தி மூர்த்தி, பாஸ்கரன், உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

மானாமதுரை தாலுகா கொம்புக்காரனேந்தலில் செயற்குழு உறுப்பினர் தா.ராமையா தலைமையில் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.இரா.நெடுஞ்செழியன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். கல்லல் ஒன்றியம் கோவிலூரில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பரணி கிட்டு தலைமையில் நடைபெற்ற உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியில் பாகமுகவர்கள் கலந்து கொண்டார்கள்.

கண்ணங்குடி ஒன்றியத்தில் ஒன்றிய கழகச் செயலாளர் லெ.முரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற உறுதி மொழிஏற்பு நிகழ்ச்சியில் ஒன்றிய நிர்வாகிகள் பாகமுகவர்கள் கலந்து கொண்டார்கள். தேவகோட்டைதெற்கு ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் நாகனி ரவி தலைமையில் நடைபெற்ற உறுதிமொழிஏற்பு நிகழ்ச்சியில் பாக முகவர்கள் கிராம மக்கள் கலந்து கொண்டார்கள். தேவகோட்டை வடக்கு ஒன்றியத்தில் செயலாளர் வழக்கறிஞர் வே பூபால சிங்கம் தலைமையில் நடைபெற்ற உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சியில் ஒன்றிய கழக நிர்வாகிகள் பாகமுகவர்கள் கலந்து கொண்டார்கள்.

தேவகோட்டை நகரில் நகர கழகச் செயலாளர் பெரி. பாலா தலைமையில் மாவட்டகழக துணைச் செயலாளர் திருமதி ஜோன்ஸ் ருசோ மூன்னிலையில் நடைபெற்ற உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியில் நகர்கழக நிர்வாகிகள் அன்புச்செல்வன், கருணாநிதி .இளங்கோ ,இலக்கிய அணிஅழகையா, ஜாகிர் உசேன், அறங்காவலர் குழு உறுப்பினர் செல்வராஜ், உட்பட நகர் கழக நிர்வாகிகள் பாகமுகவர்கள் கலந்து கொண்டார்கள்.

எஸ்.புதூர்பாரிவள்ளல் ஒன்றியத்தில் ஒன்றிய கழகச் செயலாளர் பி. செல்வராஜ் தலைமையிலும் கீழ் சேவல் பட்டியில்வடக்கு ஒன்றிய செயலாளர் விராமதி மாணிக்கம் தலைமையிலும் திருப்பத்தூர் தெற்கு ஒன்றியம் கோட்டையிருப்பில் ஒன்றிய செயலாளர் எஸ்.சண்முகவடிவேல் தலைமையில் நடைபெற்றது.நெற்குப்பையில் பேரூர் கழகச் செயலாளர் கே. பி. எஸ். பழனியப்பன் தலைமையிலும் காளையார்கோவில் தெற்கு ஒன்றியத்தில் மரவமங்கலத்தில் யோக.கிருஷ்ணகுமார் தலைமையிலும் காளையார்கோவில் கிழக்கு ஒன்றியத்தில் வே.ஆரோக்கியசாமி தலைமையிலும், காளையார்கோவில் வடக்கு ஒன்றியத்தில் ஆர்.எம்.கென்னடி தலைமையிலும் இளையான்குடி வடக்கு ஒன்றியத்தில் முன்னாள் எம்.எல்.ஏ சுப.மதியரசன் தலைமையில் நடை பெற்ற உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சியில் நிர்வாகிகள் சுப.தமிழரசன், காளி முத்து, கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இளையான்குடி, தெற்கு ஒன்றியத்தில் ஆறு.செல்வராஜன் தலைமையிலும், இளையாங்குடி கிழக்கு ஒன்றியத்தில் வே.தமிழ்மாறன் தலைமையிலும், இளையான்குடி மேற்கு ஒன்றியத்தில் ஒன்றிய கழகச் செயலாளர் கா.வெங்கட்ராமன் தலைமையிலும், சாக்கோட்டை கிழக்கு ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் சுப.சின்னதுரை தலைமையிலும், மேற்கு ஒன்றியத்தில் கே.எஸ்.ஆனந்த் தலைமையிலும் கல்லல் கிழக்கு ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் நா. நெடுஞ்செழியன் தலைமையிலும், மேற்குஒன்றியத்தில் குன்னக்குடி சுப்பிரமணியன் தலைமையிலும், அரளிக்கோட்டை தெற்கு ஒன்றிய த்தில் ஒன்றிய கழகச் செயலாளர் கே .பால சுப்பிரமணியம் தலைமையிலும் வடக்கு ஒன்றியத்தில் ஒன்றிய கழக செயலாளர் பூமணி சிவபுரிசேகர் தலைமையிலும் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. சிவகங்கை தெற்கு ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் எம்.ஜெயராமன் தலைமையிலும், சிவகங்கை மேற்கு ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் பெ.மந்தக்காளை தலைமையில் அந்தந்த ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் பாகமுகவர்கள் உறுதிமொழி ஏற்றார்கள் .

பேரூர் கழகத்தின் சார்பில் சிங்கம்புணரியில் பேரூர் கழக செயலாளர் கதிர்வேல் தலைமையில் நடைபெற்ற உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியில் நிர்வாகிகள் செல்வக்குமார், மனோகரன், புகழேந்தி, குடோன்மணி உட்பட நிர்வாகிகள் பாகமுகவர்கள் கலந்து கொண்டார்கள்.

திருப்பத்தூரில் பேரூர் கழகச் செயலாளர் ஆர்.கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்ற உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சியில் பேருராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலா ராணி நாராயணன், நிர்வாகிகள் இளைஞரணி மனோகரன், பசிர், ராம.ரவி, ஷாஜகான், சிறுபான்மை அணி என்.எம்.சாக்ளா, உதயம் சண்முகம், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் நாட்டரசன் கோட்டை பேரூர் கழக செயலாளர் ஜெயராமன் தலைமையிலும் இளையான்குடியில் பேரூர் கழகச் செயலாளர் பி.ஏ.நஜ்முதீன் தலைமையிலும் கோட்டை யூரில் ராசு தலைமையிலும், பள்ளத்தூரில் அசோக் தலைமையிலும், கானாடுகாத்தானில் பிரம்மையா தலைமையிலும், புதுவயலில் பகுருதீன் அலிபாய் தலைமையிலும் நடைபெற்ற உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியில் பாகமுகவர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக பேரறிஞர் அண்ணா திருவுருப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

மாவட்டம் முழுவதிலும் 2000க்கும் மேற்பட்ட இடங்களில் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 147வது பிறந்தநாளை முன்னிட்டு, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டச் செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் ரிஷிவந்தியம் வடக்கு ஒன்றியம், வாணாபுரம், பகண்டைக் கூட்டுச்சாலையில் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி, மரியாதை செய்து, இனிப்புகள் வழங்கினார். இந்த நிகழ்வில் மாவட்ட நிர்வாகிகள், ஒன்றியச் செயலாளர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், உடன்பிறப்புக்கள் கலந்துகொண்டனர்.

திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி வட்டாரம், வடக்குபட்டு ஊராட்சிக்கான 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமில் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றியச் செயலாளர் டி.சாமுடி, நாட்றம்பள்ளி ஒன்றியக் குழுத் தலைவர் வெண்மதி சிங்காரவேலன், டி.தேவராஜி, மோகனவேல் மற்றும் அரசு துறை அதிகாரிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தஞ்சை வடக்கு மாவட்டத்தில்

53 இடங்களில் முப்பெரும் விழா பொதுக்கூட்டங்கள்!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர் செப்.22-

தஞ்சை வடக்கு மாவட்டத்தில் கழக முப்பெரும் விழா பொதுக்கூட்டங்கள் மாவட்டம் முழுவதும் 53 இடங்களில் நடை பெற உள்ளதாக மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : -

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதல்வர், இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் ஆணைக்கினங்க கழக முப்பெரும் விழாவை கொண்டாடும் வகையில் தஞ்சை வடக்கு மாவட்டத்தில் 53 இடங்களில் கழக முன்னனி நிர்வாகிகள், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களை ஒருங்கிணைத்து பொதுக் கூட்டங்கள் கீழ் கண்டவாறு நடைபெற உள்ளது.

27.9.25 அன்று கும்பகோணம் மாநகரிலும், 28.9.25 அன்று கும்பகோணம் மேற்கு ஒன்றியத்திலும் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றிக் கொண்டான் ஆகியோரும், 29.09.25 அன்று திருவிடைமருதூர் பேரூரில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், 30.09.25 அன்று கும்பகோணம் கிழக்கு ஒன்றியத்தில் கவிச்சுடர் கவிதைப்பித்தன், 01.10.25 அன்று திருவிடைமருர் வடக்கு ஒன்றியத்தில் தூத்துக்குடி சரத்பாலா, மற்றும் அம்மாபேட்டை வடக்கு ஒன்றியத்தில் ஆடுதுறை மு.உத்திராபதி, 02.10.25 அன்று சோழபுரம் பேரூரில் இறையன்பு குத்தூஸ், சேலம் சுஜாதா, மற்றும் திருப்பனந்தாள் பேரூரில் ஆலந்தூர் ஒப்பிலாமணி, 03.10.25 அன்று திருவிடைமருதூர் தெற்கு ஒன்றியத்தில் நெல்லிக்குப்பம் புகழேந்தி, மற்றும் பாபநாசம் தெற்கு ஒன்றியத்தில் சைதை சாதிக் மற்றும் பாடகர் நாகூர் ஜக்கிரியா, 04.10.25 அன்று அம்மாபேட்டை தெற்கு ஒன்றியத்தில் பொன்னேரி சிவா, குடந்தை ரமேஷ், மற்றும் கும்பகோணம் மாநகர் பகுதி1 கம்பம் பெ.செல்வேந்திரன், 05.10.25 அன்று வேப்பத்தூர் பேரூரில் கம்பம் பெ.செல்வேந்திரன், 06.10.25 அன்று கும்பகோணம் மத்திய ஒன்றியத்தில் புதுகை பூபாலன் குழுவினர், 07.10.25 அன்று மெலட்டூர் பேரூரில் புதுகை பூபாலன் குழுவினர், 08.10.25 அன்று திருபுவனம் பேரில் பெறுநற்கிள்ளி, சுவாமிமலை பேரூரில் ஆடுதுறை மு.உத்திராபதி, 09.10.25 அன்று பாபநாசம் பேரூரில் பசும்பொன் ரவிச்சந்திரன், திருப்பனந்தாள் மத்திய ஒன்றியத்தில் ஆடுதுறை மு.உத்திராபதி, 10.10.25 அன்று அய்யம்பேட்டை பேரூரில் ஐ.பரந்தாமன் எம்.எல்.ஏ, 11.10.25 அன்று கும்பகோணம் மாநகர் பகுதி3ல் கந்திலி கரிகாலன், திருவிடைமருதூர் மேற்கு ஒன்றியத்தில் அத்திப்பட்டு சாம்ராஜ், 12.10.25 அன்று மாணவர் அணி சார்பில் சி.வி.எம்.பி.எழிழரசன் எம்.எல்.ஏ, ஷேக் அலிமாஷ் அலி, 13.10.25 திருப்பனந்தாள் கிழக்கு ஒன்றியத்தில் ஆடுதுறை மு.உத்திராபதி, 14.10.25 அன்று பொறியாளர் அணி சார்பில் தாயகம் கவி எம்.எல்.ஏ, இளைஞர் அணி சார்பில் முனைவர் சபாபதி மோகன், ரா.சிந்து நதி, 15.10.25 திருவிடைமருதூர் கிழக்கு ஒன்றியத்தில் பவானி கண்ணன், அயலக அணி - ஆடுதுறை மு.உத்திராபதி, கும்பகோணம் மாநகர் பகுதி 2ல் கரூர் முரளி, 16.10.25 அன்று பொதுக்குழு உறுப்பினர் ரேவதி நடராஜன் ஏற்பாட்டில் செந்தில் வேல், முரசொலி மூர்த்தி, 24.10.25 அன்று பாபநாசம் வடக்கு ஒன்றியத்தில் தாயகம் கவி எம்.எல்.ஏ, 25.10.25 அன்று திருநாகேஷ்வரம் பேரூரில் கடலூர் இள.புகழேந்தி, 26.10.25 அன்று திருப்பனந்தாள் மேற்கில் அமைச்சர் முனைவர் கோவி.செழியன், அம்மாபேட்டை பேரூரில் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ, 27.10.25 அன்று ஆதிதிராவிடர் அணி சார்பில் ஆரணி மாலா, விஜயலெட்சுமி, 28.10.25 அன்று தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் பொன்னேரி சிவா மற்றும் ராஜராஜேஸ்வரி, 30.10.25 அன்று அமைப்புச் சாரா ஓட்டுநர் அணி - போடி காராஜ், த.குமரவேல், 01.11.25 அன்று இலக்கிய அணி சார்பில் ஈரோடு இளைய கோபால், அருண் குமார், 02.11.25 கலை, இலக்கிய பகுத்திறு பேரவை - கரூர் முரளி, பாலகணபதி, 03.11.25 சிறுபாண்மை அணி - சைதா சாதிக், ஆடுதுறை பேரூரில் கந்திலி கரிகாலன், 04.11.25 அன்று கும்பகோணம் மாநகர் பகுதி 4ல் ஆரூர் மணிவண்ணன், தொழிலாளர் அணி - வரகூர் காமராஜ், வி.பூர்ணிமா, 05.11.25 அன்று விளையாட்டு மேம்பாட்டு அணி - பசும்பொன் இரவிச்சந்திரன், பாவை பூர்ணிமா, 06.11.25 அன்று மகளிர் அணி - சி.வி.எம்.பி.எழிழரசன் எம்.எல்.ஏ, ப.வெங்கடேஷ், 07.11.25 அன்று விவசாய தொழிலாளர் அணி - பசும்பொன் இரவிச்சந்திரன், குடந்தை ராமகிருஷ்ணன், 08.11.25 அன்று நெசவாளர் அணி - தக்கோலம் தேவபாலன், கபில்சாய், 09.11.25 விவசாய அணி - நெல்லிக்குப்பம் புகழேந்தி, 10.11.25 மகளிர் தொண்டர் அணி - தா.பழூர் இளஞ்செழியன், ஆ.தின்ஷா நூரூப், 11.11.25 அன்று மீனவர் அணி ஆடுதுறை மு.உத்திராபதி, வா.ராஜேஸ்வரி, 12.11.25 வர்த்தகர் அணி கவிச்சுடர் கவிதை பித்தன், வியாணி விஸ்வா, வழக்கறிஞர் அணி - குத்தாலம் க. அன்பழகன், ஆர்.ரகுநாத், 14.11.25 அன்று சுற்றுச்சூழல் அணி - சேலம் சுஜாதா, குடந்தை பாஸ்கர், ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

அதுசமயம் மேற்கண்ட பொதுக்கூட்டங்களில் முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், நிர்வாகிகள், வட்ட மற்றும் கிளைச் செயலாளர்கள், கழக பிரதிநிதிகள், முன்னாள் - இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு: மேற்கண்ட பொதுக்கூட்டங்களை நடத்தும் பொறுப்பாளர்கள் உரிய ஏற்பாடுகளை முன்னதாக செய்து சிறப்பாக நடத்திட வேண்டுகிறேன்.

இவ்வாறு சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

என்.கௌதமன் தலைமை! தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் –

நாகையில் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு கூட்டம்!

சிவாஜி கிருஷ்ணமூர்த்தி சிறப்புரை!

நாகை, செப். 22 –

நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டின் மண் மொழிமானம் காக்க கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் 68 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்துள்ள ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களால் முன்மொழியப்பட்டுள்ள தமிர்நாட்டை தலைகுனிய விடமாட்டோன் என்ற தீர்மான ஏற்புக் கூட்டம் பொதுக்கூட்டமாக நாகை அவுரித்திடலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் தலைமை தாங்கினார். நாகை நகரச் செயலாளர் இரா.மாரிமுத்து வரவேற்றார்.

முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், கழக விவசாய அணி துணை த்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், கழக தீர்மானக் குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், தொகுதி பார்வையாளர்களான மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் வீ.ஜெய பிரகாஷ், மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.இராஜேந்திரன், ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், க.மறைமலை, மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், துணைச் செயலாளர் கற்பகம்நீலமேகம், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி.கிருஷ்ணமூர்த்தி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், தலைமைக் கழக வழக்கறிஞர் மு.தினேஷ்குமார், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்வ.செங்குட்டுவன், ஆர்.டி.எஸ்.சரவணன், ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், மகா.குமார், கே.பழனியப்பன், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், சிக்கல் என்.ஆனந்த், சோ.பா.மலர்வண்ணன், நகரக் கழகச் செயலாளர்கள் மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பி.டி.சார்லஸ், கே.பாண்டியன், எல்.எஸ்.ஈ.பழனியப்பன், இல.பழனியப்பன், கோ.சிவக்குமார், எஸ்.பன்னீர் செல்வம் கலந்து கொண்டனர்.

முடிவில் நாகை நகர துணைச் செயலாளர் வெற்றிலைகடை ஜி.சிவா நன்றி கூறினார்.

கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பேர்பெரியாங்குப்பம், நடுக்குப்பம், வல்லம் ஊராட்சி மக்களின் நலனுக்காக 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாம் முத்தாண்டிக் குப்பத்தில் உள்ள ஸ்ரீ சுரேந்திரா திருமண மஹாலில் நடைபெற்றது. முகாமினை சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ., மாவட்ட துணை ஆட்சியர் திருமதி.சண்முகவள்ளி தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் மீரா, பாபு, வட்டாட்சியர் பிரகாஷ், டாக்டர் அறிவொளி, டாக்டர் விஜயராகவன், ராஜலிங்கம், சிவக்குமார், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை பார்த்தசாரதி, மார்க்கண்டேயன், சபா.பாலமுருகன், ஜெகநாதன் மற்றும் கழகத்தினர் கலந்துகொண்டனர்.